FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(குற்ற விசாரணை முறை சட்டப் பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I
8073048
C

1. District மாவட்டம் : நாமக்கல் PS காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு Year ஆண்டு 2019 FIR No முதல் தகவல் அறிக்கை எண் 6/AC/2019 Date நாள் 28/05/2019

2. (i) Act சட்டம்: The P.C Act 1988 as Sections பிரிவுகள் 7(a)
(ii) Act சட்டம்: amended by the Prevention of Sections பிரிவுகள்
(iii) Act சட்டம்: Corruption(Amendment) Act 2018 Sections பிரிவுகள்
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் 21.05.2019 Date to நாள் வரை பகல் மணி 13.00 மணிக்கு
Time Period நேர அளவு : Time from நேரம் முதல் 28.05.2019 Time to நேரம் வரை பகல் மணி 13.00 மணிக்கு
(b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 28/05/2019 Time நேரம் பகல் 11.00 மணிக்கு
(c) General Diary Reference Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Volume - II 28/05/2019 Time நேரம் பகல் 11.00 மணிக்கு

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினியில் டைப் செய்யப்பட்ட புகார்.

5. Place of Occurrence (a) Direction and Distance from PS குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 23 கி.மீ வடகிழக்கு.
Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி சார்பதிவாளர் அலுவலகம், மோகனூர்.
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையின் அந்த காவல் நிலைய பெயர் District : மாவட்டம் –

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திருமதி.P.ராதா (b) Father's/ Husband's Name : தந்தை / கணவன் பெயர் திரு. பெரியசாமி
(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு வயது - 40 (d) Nationality : நாட்டினம் இந்தியன் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் டியூசன் சென்டர் (g) Address : முகவரி கதவு எண்.9 அய்யம்பட்டி ரோடு, பரமத்திபுரம், மோ.நி-7K, நாமக்கல் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
திருமதி. சாந்திமதி, இளநிலை உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், மோகனூர். நாமக்கல் மாவட்டம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
. இல்லை .

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது :-

விபரம் தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ................ Rank ................ to take up the investigation / Refused investigation / transferred to PS ................ on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................ பதவி ................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லைக் கருதி புலனாய்வுக்கு ................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

P. Radha. 28/05/19

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
28/5/2019

15. Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும் நேரமும்
28/05/2019 அன்று 5 மணிக்கு

Name பெயர் திருமதி ...
Rank நிலை ................ No எண் ................
காவல் ஆய்வாளர்,
...

• GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12) p.2

28/05/19

**நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.6/AC/2019 u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி பதிவு செய்யப்பட்ட முதல் தகவலறிக்கையின் வரிசை எண்.12-ன் தொடர்ச்சி...**

இன்று 28.05.2019-ஆம் தேதி செவ்வாய்கிழமை பிற்பகல் 14.00 மணிக்கு காவல் ஆய்வாளராகிய நான் நிலைய அலுவலில் இருந்தபோது திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், பார்வதிபுரம், அழகாபட்டி ரோடு, கதவு எண்.9ல் வசிக்கும் திரு.பெரியசாமி என்பவரின் மகள் திருமதி.P.ராதா என்பவர் நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகம் ஆஜராகி எழுத்து மூலமான புகாரினை சமர்ப்பித்தார். அந்த புகாரின் விபரம் பின்வருமாறு:-

அனுப்புநர் திருமதி.P.ராதா (40), த/பெ.பெரியசாமி, கதவு எண்.9 அழகாபட்டி ரோடு, பார்வதிபுரம், முசிறி-Tk, திருச்சி மாவட்டம். பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, நாமக்கல் மாவட்டம் ஐயா,நான் மேற்கண்ட முகவரியில் எனது கணவர் திரு.கோபாலகிருஷ்ணன், மகள் கோபிகாஸ்ரீ, அப்பா திரு.பெரியசாமி, அம்மா திருமதி.பார்வதி ஆகியோருடன் குடியிருந்து வருகிறேன். முசிறியில் காமாட்சி டுடோரியல் காலேஜ் என்ற பெயரில் 17 வருடங்களாக டியூசன் சென்டர் நடத்தி வருகிறேன். எனது தாத்தா திரு.கந்தையா கடந்த 10.10.1983-ஆம் தேதி இறந்துவிட்டார். அவரின் மனைவியான எனது அம்மாச்சி திருமதி.K.தங்கம்மாள் கடந்த 1995-ல் இறந்துவிட்டார். தற்போது எனது அம்மாவின் அனுபவத்தில் உள்ள மேற்படி ஆண்டாபுரம் கிராமத்தில் உள்ள சுமார் 1¼ ஏக்கர் விவசாய நிலம் எனது அம்மாச்சி திருமதி.K.தங்கம்மாள், எனது சின்னம்மா திருமதி.K.வள்ளியம்மை, எனது அம்மா திருமதி.K.பார்வதி ஆகியோர் பெயர்களில் கூட்டுப்பட்டாவாக உள்ளது. அதனால் எனது அம்மா திருமதி.K.பார்வதி பெயருக்கு தனிப்பட்டா பெறுவதற்கு மோகனூர் தாலுக்கா அலுவலகத்தில் மனு செய்திருந்தேன். அந்த மனுவின் மீது விசாரணை மேற்கொண்டு எனது தாத்தா திரு.கந்தையா அவர்களின் இறப்புச்சான்று இணைக்க வேண்டும் என்று சொன்னார்கள். அதனால் எனது தாத்தா திரு.கந்தையாவின் இறப்புச் சான்று பெற நான் கடந்த 09.05.2019-ஆம் தேதி பகல் சுமார் 2.00 மணிக்கு மோகனூர் சார்பதிவாளர் அலுவலகம் சென்று அங்கு ஜுனியர் அசிஸ்டென்ட்டாக வேலை செய்யும் திருமதி.காந்திமதி என்பவரை சந்தித்து எனது தாத்தா திரு.கந்தையா பெயருக்கு இறப்புச் சான்றிதழ் வழங்குவது சம்மந்தமாக கேட்டேன். அப்போது அவர் அப்ளிகேசன் கொடுக்கச் சொன்னார். நான் அப்ளிகேசன் பூர்த்தி செய்து கொடுத்தேன். அவர்

அப்ளிகேசனை வாங்கிக் கொண்டு ரூ.600/- பீஸ் என்று சொல்லி என்னிடம் கேட்டு வாங்கிக் கொண்டு ஒரு வாரம் கழித்து வரச்சொன்னார். அதன்பின் எனது அம்மா திருமதி.பார்வதி பெயருக்கு தனிப்பட்டா பெறுவதற்கு எனது அம்மாச்சி திருமதி.தங்கம்மாள் என்பவரின் இறப்பு குறித்து கடந்த 1996 முதல் 2016 வரையிலான 21 வருடங்களுக்கான இறப்பு குறித்து பதிவு செய்துள்ளது குறித்த சான்றிதழும் தேவைப்படுகிறது என்று மோகனூர் தாலுக்கா அலுவலகத்தில் தகவல் தெரிவித்தார்கள். அதனால் நானும், எனது அம்மாவும் கடந்த 24.05.2019-ஆம் தேதி பகல் சுமார் 1.00 மணிக்கு மோகனூர் சார்பதிவாளர் அலுவலகம் சென்று ஜூனியர் அசிஸ்டென்ட் திருமதி.காந்திமதி அவர்களை சந்தித்து எனது தாத்தா திரு.கந்தையா மற்றும் அம்மாச்சி திருமதி.தங்கம்மாள் பெயருக்கு இறப்புச் சான்றிதழ் நகல் வழங்குவது சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர் நிறைய ரிஜிஸ்டரில் தேடவேண்டும் என்று சொன்னார். மேலும் அவர் எனது அம்மாச்சி திருமதி.தங்கம்மாள் பெயரில் கடந்த 1996 முதல் 2016 வரையிலான 21 வருடங்களுக்கான இறப்பு குறித்து பதிவு செய்துள்ளது தேடுதல் சம்மந்தமான வேலைகளை செய்து சான்றிதழ் வழங்க ஏற்பாடு செய்து கொடுக்க ரூ.5,000/- தனக்கு தனியாக கொடுக்க வேண்டும் என்று சொன்னார். அதற்கு நான் தொகை அதிகமாக உள்ளது, கவர்ன்மெண்ட் பீஸ் எவ்வளவு மேடம் என்று கேட்டேன். அதற்கு அவர் கம்ப்யூட்டரில் பார்த்துவிட்டு, கவர்ன்மெண்ட பீஸ் தனியாக வரும் அதை பிறகு சொல்கிறேன் என்றும், பணத்தை இப்ப கொடுங்க, சப்ரிஜிஸ்தார் ஆபீசில் இல்லை, அவர் வந்ததும் நான் சான்றிதழ் பெற்றுத் தருகிறேன் என்று சொன்னார். அதற்கு நான் அவ்வளவு பணம் கொண்டு வரவில்லை மேடம் என்று சொன்னேன். பின்னர் என்னிடம் ஒரு அப்ளிகேசன் வாங்கி அதை பூர்த்தி செய்து கொடுக்குமாறு கேட்டார். நான் சார்பதிவாளர் அலுவலகத்திற்கு எதிரே உள்ள கடையில் அப்ளிகேசன் வாங்கி பூர்த்தி செய்து அதனுடன் எனது ஆதார் கார்டு நகலையும் இணைத்து கையெழுத்து போட்டுக் கொடுத்தேன். அப்போது அவர் தனது பெயர் காந்திமதி என்றும், தான் ஜூனியர் அசிஸ்டென்டாக வேலை செய்கிறேன் என்றும், அவரது செல்போன் நெம்பர் 9578172701 என்றும் என்னிடம் சொல்லிவிட்டு, என்னுடைய அப்ளிகேசனை வாங்கி வைத்துக் கொண்டு வரும் வாரம் செவ்வாய்க்கிழமை அல்லது புதன்கிழமை எனக்கு போன் செய்துவிட்டு நான் கேட்ட பணம் ரூ.5,000/- உடன் வாங்க உங்களுக்கு சான்றிதழ் பெற்றுத் தருகிறேன் என்று சொன்னார். அதனால் நான் இன்று 28.05.2019-ஆம் தேதி பகல் சுமார் 01.00 மணிக்கு நான் திருமதி.காந்திமதி அவர்களின் செல்போன் எண்ணிற்கு எனது செல்போன்

எண்.9994019282-இல் இருந்து போன் செய்து பேசிய போது இன்னும் சான்றிதழ் குறித்து தேடவில்லை என்றும், நான் கேட்ட பணம் ரெடியாயிடுச்சா என்றும் கேட்டார். நான் அவ்வளவு ரெடி பண்ண முடியவில்லை என்று சொன்னேன். அதற்கு அவர் ரூ.4,500/- கொண்டு வந்து கொடுங்க அதன்பின் சான்றிதழ் பெற்று தருகிறேன் என்று சொன்னார். திருமதி.காந்திமதி அவர்களுக்கு லஞ்சம் கொடுத்து எனது அம்மாச்சி திருமதி.தங்கம்மாள் இறப்பு குறித்த பதிவு சான்றிதழ் பெற எனக்கு விருப்பமில்லை. எனது அம்மாச்சி திருமதி.K.தங்கம்மாள் இறப்பு குறித்து பதிவு செய்துள்ளது சம்மந்தமாக சான்றிதழ் வழங்க ஏற்பாடு செய்ய ரூ.4,500/- லஞ்சமாக கேட்கும் மோகனூர் சார்பதிவாளர் அலுவலக ஜுனியர் அசிஸ்டென்ட் திருமதி.காந்திமதி அவர்களை அவர் கேட்ட பணத்துடன் சந்திக்க உள்ளேன். எனவே திருமதி.காந்திமதி அவர்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு (Sd/-xxx-P.Radha) 28/05/19.

மேற்கண்ட புகார் மனுவை பெற்று, படித்துப்பார்த்து, புகாரில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கதிகளின் அடிப்படையில் கைது செய்யப்படக்கூடிய குற்றம் ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா என்றும், எதிரிக்கும், புகார்தாரருக்கும் தனிப்பட்ட முறையில் முன்விரோதம் உள்ளதா என்பது குறித்தும் இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்ய போதுமான முகாந்திரம் இருப்பதும், புகார்தாரருக்கும், எதிரிக்கும் முன்விரோதம் ஏதுமில்லை என்றும், புகார்தாரருடைய புகார் நம்பகத்தன்மை கொண்டது என்பதும் தெரிய வந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று இன்று 28.05.2019-ஆம் தேதி பிற்பகல் 14.45 மணிக்கு நாமக்கல் மாவட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு குற்ற எண்.06/AC/2019, u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018-ன்படி மேற்படி எதிரி மீது குற்ற வழக்கு பதிவு செய்யப்பட்டது.

பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் புகார்தாரரின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி மற்றும் தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர், நாமக்கல் அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைத்து, வழக்கினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டேன்.

(M. நல்லம்மாள்) 28/5/2019
காவல் ஆய்வாளர்,
ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
நாமக்கல்.